## சென்னை வரைவாளர் இல்ல வரலாறு



நமது வரைவாளர் சங்கத்திற்கு முதன் முதலில் மதுரை கிளையில் தான் சொந்தமாக வரைவாளர் இல்ல கட்டடம் கட்டப்பட்டது. அதேபோல அலுவல் நிமித்தமாக சென்னை செல்லும் நமது சங்க உறுப்பினர்கள் தங்குவதற்கு நமது சங்கத்திற்கென ஒரு இல்லம் கட்டப்பட வேண்டும் என மையச்சங்க நிர்வாகிகள் மற்றும் கிளைச்சங்க நிர்வாகிகளால் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் சென்னையில் தற்காலிகமாக ஒரு வாடகை கட்டடம் பிடித்து அதில் இயங்குவது அதன் பின்னர் சொந்த கட்டடம் கட்ட முயற்சி மேற்கொள்ளலாம். என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 1989-ம் வருடம் சென்னை கலைவாணர் அரங்கத்திற்கு எதிர்புறம் T.N.K.சந்தில் ஒரு வாடகை கட்டடம் ரூ.1000/- மாத வாடகையில் பிடிக்கப்பட்டு அதில் நமது சங்க உறுப்பினர்கள் சென்னைக்கு அலுவல் நிமித்தமாக செல்பவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு சென்னையில் நமது வரைவாளர் இல்லமானது தற்காலிகமாக இயங்கி வந்தது.

அதன் பின்னர் சென்னையில் வரைவாளர் இல்லத்திற்கு சொந்த கட்டடம் வாங்குவதற்கு அனைத்து கிளைகள் மூலமும் நிதி திரட்டி வாங்குவதென முடிவெடுக்கப்பட்டு அதற்கு பெரு முயற்சி எடுக்கப்பட்டது. முதலில் பரிசுத் திட்டம் ஆரம்பித்து அதன் மூலம் ஒரு தொகையானது திரட்டப்பட்டது. பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்து கிளைகள் மூலமும் கட்டட நிதியானது வழங்கப்பட்டது. மேற்கண்ட கட்டடத்திற்கு குறிப்பாக மதுரை, பொள்ளாச்சி, திருச்சி, திருநெல்வேலி, சேலம் மற்றும் விருதுநகர் கிளை மூலம் பெரும் முயற்சி மேற்கொண்டு அதிக அளவில் நிதி வழங்கப்பட்டது. மற்ற கிளைகள் மூலமும் போதிய நிதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிதி திரட்டுவதற்கு மூன்று வருடங்கள் ஆகின. அதன் பின்னர் 1993-ம் வருடம் கலைவானர் அரங்கத்திற்கு எதிர்புறம் அருணாச்சல முதலியர் தெருவில் ஒரு பழைய கட்டடம் சுமார் 1100 சதுர அடி பரப்பளவில் வாங்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடத்தில் 600 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 5 அறைகள் இருந்தன. மீதி 500 சதுர அடியானது நீளமான சந்து மற்றும் வெற்றிடமாக இருந்தது. அந்த கட்டிடத்தில் தான் நமது வரைவாளர் இல்லமானது 1993 முதல்

2013 வரை சுமார் 20 ஆண்டுகள் இயங்கி வந்தது.

மேற்கண்ட கட்டடமானது மிகவும் பழைய கட்டடமாக இருந்தாலும் அதில் நமது இல்லமானது மேலும் 20 ஆண்டுகள் இயங்கியதாலும் கட்டடம் மோசமான நிலையில் இருந்தது. அதனை சுற்றி கட்டடங்கள் இருந்ததால் அதனை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட இயலாத சூழ்நிலையில் இருந்தது. மேலும் புதிய கட்டடம் கட்டும் அளவிற்கு நமது சங்கத்தில் போதிய நிதி வசதியுடம் இல்லை. மேலும், 2010–ம் ஆண்டு நமது சங்கமானது மிகவும் வலுவிழந்து விட்டதால் மேற்கண்ட கட்டடத்தை பராமரித்துப் பார்க்கவும் இயலவில்லை.

வலுவழந்த நமது சங்கத்தை மீட்டெடுத்து மீண்டும் வலுவாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு 2010–ம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் திரு.N.B.புண்ணியமூர்த்தி, பொதுச் செலாளராகவும் திரு.சுந்தரம், மாநிலத் தலைவராகவும் நான் அமைப்புச் செயலாளராகவும் பொறுப்பேற்றோம்.

நாங்கள் பொறுப்பேற்றப்பின் மேற்கண்ட நமது இல்லக் கட்டடத்தை புதுப்பித்தல் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகள் நடத்தினோம். அன்றைய பொதுச் செயலாளர் திரு.N.B.புண்ணியமூர்த்தி மூலம் அதற்கு சிறந்த வழி பிறந்தது. தற்போதும் கலைவாணர் அரங்கத்திற்கு எதிராக அமைந்துள்ள The Kings Park Hotel உரிமையாளர் நமது இல்லக் கட்டடத்தை விலைக்கு வாங்க முன்வந்ததையடுத்து, வரைவாளர் இல்லக் கட்டடத்தை மேற்கண்ட Hotel உரிமையாளர்களிடம் விற்றுவிட்டு அந்த தொகையில் வேறு கட்டடமோ அல்லது வேறு இடத்தில் நிலம் வாங்கி புதிய கட்டடமோ கட்டலாமா என ஆலோசனை செய்தோம். ஆனால் அதற்கான சாத்தியக்கூறுகள் எளிதில் அமையாது என்றே தோன்றியது. ஆனாலும் இந்த வாய்ப்பையும் இழக்கக்கூடாது என்றும் நல்லதொரு முடிவு எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்தோம்.

இது தொடர்பாக மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் திரு.N.B.புண்ணியமூர்த்தி அவர்கள் சாதூர்யமாக பேசி சில யோசனைகள் தெரிவித்தார். அதாவது அந்த Hotel உரிமையாளரே வேறு ஒரு இடம் வாங்கி அதில் புதிய இல்லம் கட்டி கொடுக்க வேண்டும் என்றும் பழைய கட்டடத்தை அவருக்கு கொடுத்து விடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. Hotel உரிமையாளரும் சுமார் 5 இடங்கள் வரை காண்பித்தார். எதுவும் எங்களுக்கு பிடிக்கவில்லை கடைசியாக நமது இல்லம் தற்போது அமைந்துள்ள இடத்தை காண்பித்தார் அந்த இடமானது நமது பழைய இல்லத்திற்கு அருகாமையில் இருந்ததால் இந்த இடத்தை தேர்வு செய்தோம்.

மேற்கண்ட இடமானது சுமார் 615 சதுர அடி நமது பழைய கட்டிடமானது காலியிடத்துடன் சேர்த்து சுமார் 1100 சதுர அடி எனவே திரு.புண்ணியமூர்த்தி அவர்கள் மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் மிகவும் சாதூர்யமாக பேசி நமது சங்கத்திற்கு எந்த செலவும் ஏற்படாவண்ணம் Hotel உரிமையாளரே இந்த இடத்தை வாங்கி அதில் தரைதளத்தில் ஒரு Hall முதல் தளத்தில் 3 அறைகள் இரண்டாவது தளத்தில் 3 அறைகள், மூன்றாவது தளத்தில் ஒரு அறை மற்றும் Passage என ஒரு

அருமையான கட்டிடம் கட்டி அதில் அனைத்து Furniture –களும் அமைத்து TV உட்பட நமது சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும். என பேச்சு வார்த்தை நடத்தினார். மேற்கண்ட Hotel உரிமையாளர் இதற்கு பெரிதும் தயக்கம் காட்டினார் இருப்பினும் நாங்கள் அனைவரும் அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தி அவரை சம்மதிக்க வைத்தோம்.

மேற்கண்ட புதிய இல்லம் கட்டும்போது கட்டுமான பணிகளை ஆய்வு செய்வதற்கென ஒரு குழுவை அமைத்து கட்டிட பணிகளை அவ்வப்போது ஆய்வு செய்து கட்டட பணியானது சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது. புதிய இல்லக் கட்டடமானது சிறந்த முறையில் கட்டி முடிக்கப்பட்டு அனைத்து Furniture–களும் அதாவது ஒவ்வொரு அறைக்கும் மரக்கட்டில், Chair, மெத்தை மற்றும் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இவ்வாறு அனைத்து வசதிகளும் செய்யப்பட்ட பின்னர் நமது பழைய இல்லக் கட்டடத்தை மேற்கண்ட Hotel உரிமையாளரிடம் ஒப்படைத்து விட்டு புதிய இல்லக் கட்டடத்தை நமது சங்கத்திற்கு பெற்றோம்.

அவ்வாறு பெறப்பட்ட இன்றைய வரைவாளர் இல்லக் கட்டடத்தை திரு.N.B.புண்ணியமூர்த்தி அவர்கள் முன்னிலையில் நமது சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர், திரு.N.சேதுராமசாமி அவர்களால் 22.02.2013 அன்று திறந்து வைக்கப்பட்டு நமது சங்க உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட புதிய இல்லம் உருவாக முழு முதல் காரணமாக இருந்தவர் நமது முன்னாள் பொதுச் செயலாளர், திரு.N.B.புண்ணியமூர்த்தி தான் அவருக்கு இத்தருணத்தில் நமது வரைவாளர்கள் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம்.

**நன்றி,**

**அன்புடன்,**
**சு.பவுன்ராஜன்,**
**முன்னாள் மாநிலத் தலைவர்.**